## அறிவுறுத்தல்கள்

இசைவு விண்ணப்பப் படிவத்தின் வினா இலக்கங்கள் 08, 10, 11, 12, 13, 23 மற்றும் 26 என்பவற்றைப் பூரணப்படுத்துகையில் பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவும். (முழு விண்ணப்பப் படிவத்தையும் ஆங்கில பேரெழுத்துக்களில் பூரணப்படுத்தவும். eg :- BANDARA)

08. இசைவுச் சான்றிதழை சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள தூதரகம் உள்ளடங்கும் நாட்டைக் குறிப்பிடல் வேண்டும்.

10. வெளிநாடுகளின் தூதுவர்களது முகவரிகளுக்கு, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு மாத்திரமே இசைவுச் சான்றிதழ் வழங்கப்படுவதோடு, தனியார் நிறுவனங்களுக்கு இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது. அத்துடன் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பிரதேச பொலிஸ் நிலையங்களிலிருந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

11. தேசிய அடையாள அட்டையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவாறே பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

12. வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவாறே பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

13. வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் உள்ள பெயருக்கா, தேசிய அடையாள அட்டையில் உள்ள பெயருக்கா இசைவுச் சான்றிதழை அச்சிடுதல் வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் குறித்த பெயர் மாற்றம் செய்யப்பட்ட பக்கத்தின் ஒரு பிரதியையும் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் உள்ள பெயருக்கு சான்றிதழைக் கோருகையில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் உள்ள பெயருக்கும் தேசிய அடையாள அட்டையில் உள்ள பெயருக்கும் இடையே வேறுபாடு இருக்குமாயின் அதன் பொருட்டு, சட்டத்தரணி ஒருவரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசியின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (குறித்த சத்தியக் கடதாசியானது பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து 06 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்)

23. இலங்கையில் வசித்த காலத்தை மாத்திரமே உள்ளடக்குதல் வேண்டும். (வெளிநாட்டிலிருந்த காலத்தைத் தவிர்த்து)

- வசித்த கால எல்லைகளை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். (நாள்/மாதம்/வருடம்)
- வசித்த முகவரிகள் மற்றும் பொலிஸ் பிரிவுகளை சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

மேற்குறித்த விடயங்களை சரியாக உள்ளடக்குதலானது இசைவு அறிக்கையினை 14 அலுவலக நாட்களுக்குள் வழங்குவதற்குத் துணையாக அமையும்.

26. விசாரணைகளின் போது விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ள வேண்டியிருந்தால் அதன் பொருட்டு இலங்கையினுள் பயன்படுத்தப்படும் தொலைபேசி இலக்கமொன்றைக் குறிப்பிடல் வேண்டும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை**

- **இசைவு விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கக் கூடிய முறை**

I. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை ஓல்கட் மாவத்தை, கொழும்பு 11 எனும் முகவரியில் அமைந்துள்ள கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் கீழ் தளத்தில் தாபிக்கப்பட்டுள்ள இசைவு விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் அலுவலகத்தில் கையளிக்க முடியும் என்பதோடு, அதற்கான பணத்தையும் குறித்த அலுவலகத்திலேயே செலுத்தலாம். (காசோலை மூலமாக செலுத்துதல் மற்றும் பொலிஸ்மா அதிபரின் கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பு செய்தல் ஆகாது)

II. வெளிநாட்டில் இருக்கும் விண்ணப்பதாரிகள், தம்மால் பூர்த்தி செய்யப்பட்ட கையொப்பத்துடனான விண்ணப்பப் படிவத்தினை விண்ணப்பப் படிவத்தின் 24ஆம் இலக்கத்திற்கு அமைய உறவினர் ஒருவர் ஊடாக ஓல்கட் மாவத்தை, கொழும்பு 11 எனும் முகவரியில் அமைந்துள்ள இசைவு விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் அலுவலகத்தில் கையளிக்க முடியும்.

III. இயங்கலை ஊடாக இசைவுச் சான்றிதழைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் முறை (Online) மூலம் இசைவு விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கக் கூடிய வசதி காணப்படுவதோடு, அதற்கான பணத்தினை Credit Card மூலமும் Debit Card மூலமும் செலுத்த முடியும். (www.police.lk / www.gov.lk)

IV. வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தேசிய அடையாள அட்டையின் 02 பிரதிகளையும் மற்றும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டின் ஒரு பிரதியையும் அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறல்லாத விண்ணப்பப் படிவங்களுக்கு இசைவு அறிக்கைகள் வழங்கப்படாது என்பதை அறியத் தருகிறேன்.

V. இலங்கையில் தூதரகமொன்று இல்லாத வெளிநாடு ஒன்றிலிருந்து விண்ணப்பப் படிவத்தை பொலிஸ்மா அதிபர், பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்புகையில் அதற்குரிய 1500/- தொகையை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் 7041413 எனும் பொலிஸ்மா அதிபரது கணக்கிற்கு வரவு வைத்து அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் அனுப்புதல் வேண்டும்.

- உங்களது விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
  - I. இறுதியாக வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் தெளிவான பிரதிகள் இரண்டு
  - II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மற்றும் அதன் ஒரு பிரதி (பெயர் மாற்றம் செய்திருப்பின் மாற்றம் செய்யப்பட்ட பக்கத்தின் ஒரு பிரதியை சமர்ப்பிக்கவும்)
- விண்ணப்பப் படிவத்தைப் பரிசீலனை செய்கையில் பிரதேச பொலிஸ் அறிக்கையை பரிந்துரைக்காமை மற்றும் தேசிய அடையாள அட்டை தொடர்பில் சிக்கல் ஏற்பட்டால் மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படுவதால் சரியான மின்னஞ்சல் முகவரியினைக் குறிப்பிடல் வேண்டும்.
- பொலிஸ் இசைவு அறிக்கையானது, இலங்கை பொலிசினால் உங்களைப் பற்றி மேற்கொள்ளப்படும் விசாரணை மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பின்னணி அறிக்கையின் அடிப்படையில் பொலிஸ் தலைமையகத்தின் தலைமையக நிர்வாகப் பணிப்பாளரினால் வழங்கப்படுவதோடு, விண்ணப்பதாரி குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.
- வெளிநாட்டு விண்ணப்பதாரி எனில், இலங்கைக்கு வருகை தந்த மற்றும் வெளியேறிய கடவுச் சீட்டின் இலக்கத்தை சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.
- பொலிஸ், முப்படை, சிவில் பாதுகாப்புப் படையணி, கரையோர பாதுகாப்பு படையணி போன்ற படையணிகளில் வினைத்திறனான சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் எழுத்துமூல அனுமதியின் பேரில் மாத்திரமே பொலிஸ் இசைவு அறிக்கை வழங்கப்படும்.
- சான்றிதழ் வழங்கப்பட்ட தினத்தை மீண்டும் நீடிக்க வேண்டுமாயின் (Renewal) விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து மூலப்பிரதியில் உள்ள தகவல்கள் மற்றும் கால எல்லையை மாத்திரம் உள்ளடக்கல் வேண்டும் என்பதோடு, தூதுவர் முகவரியைத் தவிர வேறு எந்தவொரு மாற்றத்தையும் செய்தலாகாது. (க.கொ.வே – இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் விண்ணப்பித்தல் வேண்டும்)
- கையளிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் பின்னூட்டல் தேவையெனில் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அல்லது பொலிஸ் தலைமையகத்தின் முதலாம் தளத்திலுள்ள இசைவுப் பிரிவுக்கு சமுகமளித்து அறிந்து கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் – 011-22439185, 011-2421111
தொலைநகல் இலக்கம் – 011-2439186, 011-2439187,011-2439188
மின்னஞ்சல் – clear@police.lk
இணையத்தள முகவரி – www.police.lk